**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**

**மேட்டூர்.**

**OS.No**. 292/2014

**வழக்கு சாட்சி DW.3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | உமாசங்கர் | கணவர் பெயர் | : ----- |
| தகப்பனார் பெயர் | வெங்கடாஜலம் | வயது | : 50 |
| கிராமம் | மேட்டூர் | நாள் | : 15.10.2025 |
| தாலுகா | மேட்டூர் | | |
| மாவட்டம் | சேலம் | | |

<u>முதல் விசாரணை :</u>

1) நான் மேட்டூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் முதுநிலை வருவாய் ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் அடிப்படையில் மேட்டூர் வட்டாட்சியர் வழங்கிய அதிகார கடிதத்தின் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். **மேற்படி அதிகார கடிதம் சா.சா.ஆ–1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. எங்களுக்கு வழங்கப்பட்ட அழைப்பாணையில் சாம்பள்ளி கிராமத்தில் அமைந்துள்ள ச.எண்.848 க்கான 1972 ம் ஆண்டிற்குரிய UDR –FMB மற்றும் UDR– A Register கொண்டுவரும் படி குறிப்பிடப்பட்டிருந்தது. மேற்கண்ட ஆவணங்கள் அனைத்தும் எங்கள் அலுவலகத்திலிருந்து சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அனுப்பிவிடப்பட்டது. அதற்கு அத்தாட்சி செய்து வட்டாட்சியர் அவர்கள் கடிதம் வழங்கியுள்ளார். மேலும் புல எண்.848/1 என்பது கடந்த 1991 ம் வருடம் பசலி 1401, ச.எண்கள்.848/1A, 1B, 1C என உட்பிரிவு செய்யப்பட்டுவிட்டது. அந்த உட்பிரிவு கோப்பும் இல்லை என்பது குறித்தும் வட்டாட்சியர் மேற்கண்ட அத்தாட்சி கடித்தில் குறிப்பிட்டுள்ளார். **அந்த அத்தாட்சி கடிதம் சா.சா.ஆ–2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

2) மேலும் அழைப்பாணையில் எந்த தேதியில் ச.எண்.848 என்பது உட்பிரிவு செய்யப்பட்டது என்று கோரப்பட்டுள்ளது. அதற்குண்டான 1984 ல் வழங்கப்பட்ட நில உடமை மேம்பாட்டு திட்ட அ–பதிவேட்டின் சான்றிட்ட நகல் கொண்டு வந்துள்ளேன். மேற்கண்ட புல எண் ஐந்து உட்பிரிவுகளாக 1984 ல் தமிழ்நாடு நில உடமை மேம்பாட்டு

திட்டத்தின்போது பிரிக்கப்பட்டுள்ளது. **அந்த அ–பதிவேடு சா.சா.ஆ–3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 1984 ல் தான் மேற்கண்ட புலஎண் உட்பிரிவு செய்யப்பட்டது என்று நான் தாக்கல் செய்த அ–பதிவேட்டில் குறிப்பாக குறிப்புகள் எதுவும் இல்லை. நான் கொண்டுவந்துள்ள அசல் அ–பதிவேட்டில் முதலிலிருந்து 6 வது பக்கத்தில் அவ்வாறு தேதி குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த **அ–பதிவேட்டின் 1 முதல் 6 பக்கங்களின் சான்றிட்ட நகல் ச.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

3) 1979 ம் வருடத்தில் அரசாணை பிறப்பிக்கப்பட்டு அதன் அடிப்படையில் ஐந்து வருடங்கள் தொடர்ந்து நில உடமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. 1984 க்கு முன்னதாகவே ச.எண்.848 ஆனது, ச.எண்.848/1 முதல் ச.எண்.848/5 என இருந்தது. புல எண்.848 க்குரிய புல வரைபடமும், அது **சா.சா.ஆ–5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.அந்த புலவரைபடத்தில் ச.எண்.848/1A க்கு மேற்குபக்கம் அச்சங்காடு ஆதிதிராவிட நத்தம் என்று ஒரு குறிப்பிட்ட பகுதியில் குறிக்கப்பட்டுள்ளது. ச.எண்.848/1A ன் மொத்த விஸ்தீரணம் 1.06.5 ஹெக்டேர்ஸ் ஆகும். பரப்பு 2.63 ஏக்கர் ஆகும்.

4) ச.எண்.848/1A ஆனது தற்போது சாம்பள்ளி கிராம பட்டா எண்.97 ல் மொத்தம் 10 நபர்களின் பெயரில் கூட்டுப்பட்டாவாக உள்ளது. பட்டாதாரர்களின் பெயர்கள் 1. ரத்தினம் மகன் சகாயராஜா, 2. ரத்தினம் மகன் அமலதாஸ், 3. ரத்தினம் மகன் பால்ராஜ், 4. ரத்தினம் மகன் ஆல்பட்ர்ட், 5. ரத்தினம் மகன் வின்செண்ட், 6. காளியப்பன் மகன் கோபால், 7. காளியப்பன் மகன் துரைசாமி, 8. அம்புரோஸ் மகன் அருள்சாமி, 9. ஆறுமுகம் மகன் மாரியப்பன், 10. மாரியப்பன் மனைவி கலா ஆகும். அந்த பட்டா கணினி பதிவிறக்க நகல் **சா.சா.ஆ–6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

5) ச.எண்.848/1 என்பது உட்பிரிவு செய்வதற்கு முன்பு பட்டா எண்.97 ஆனது சண்முகம் மற்றும் 6 நபர்களின் பெயரில் கூட்டாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட விவரம் நான் தாக்கல் செய்திருந்த அ–பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. பரப்பு 2.63 ஏக்கர் என்று நான் சொல்லியுள்ளது, பட்டா எண்.97 க்கு உரியது ஆகும்.

**<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

1) ச.எண்.848/1 என்பது சண்முகம் மற்றும் 6 நபர்களின் பெயரில் கூட்டாக உள்ளதாக நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த 6 நபர்களின் பெயர்கள் சொல்லஇயலுமா என்றால் அது உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதால், அதற்குண்டான குறிப்புகள் எங்களிடம் இல்லை.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.